# ஜெயங்கொண்டம் நகராட்சி

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| | | **நகர் மன்ற சதாரணக் கூட்டம்**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18.11.2022 ஆம் தேதி வெள்ளிக்_கிழமை காலை 10.30 மணி அளவில் நடைபெற உள்ள சதாரணக் கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கான மன்றப் பொருள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.<br>இக்கூட்டத்தில் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.<br>**நகர் மன்றத் தலைவர்,**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி** | |
| 18.11.2022 | 174 | இந்நகராட்சி ஆணையர் அவர்களது அக்டோபர் 2022 மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம். | மன்றம் பதிவு செய்யப்படுகிறது |
| 18.11.2022 | 175 | இந்நகராட்சியில் Swachhata Ke Do Rang என்ற தலைப்பில் பொதுமக்களுக்கு குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் தொடர்பாக ஜெயங்கொண்டம் நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ மற்றும் மாணவியர்களை கொண்டு வீடு வீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு 1. குப்பைகள் என்பது என்ன! அதை பிரித்து கொடுத்தால் என்ன? 2. குப்பைகளை பிரித்து கொடுத்த தோட்டத்திற்கு உரத்தை கொடு? 3. பிளாஸ்டிக் பை வாங்கதோ! நம் பூமி தாங்கதோ! என்ற வாசகத்தில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் கொள்முதல் செய்ய தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், என்ற நிறுவனத்தில் வாங்கி வழங்கவும் மற்றும் பணியின் செலவினத்திற்கான உத்தேச தொகை ரூ.1,25,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 4175/2022/எச்1** | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| 18.11.2022 | 176 | ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2022 – 23 ன் கீழ் பொது சுகாதாரப்பிரிவில் பொது சுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 18.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு நிறுவனத்தின் விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **மன்றம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது** |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td>ஸ்ரீ முருகன் எண்டர்பிரைசஸ், ஜெயங்கொண்டம்.</td><td>ராஜீ ஏஜென்ஜிஸ், ஜெயங்கொண்டம்.</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>300000.00</td><td>338639.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்த ஸ்ரீ முருகன் எண்டர்பிரைசஸ், ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 3720/2022/எச்1</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>18.11.2022</td>
<td>177</td>
<td>
ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2022 – 23 ன் கீழ் பொது சுகாதாரப்பிரிவில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கதிற்கு தேவையான மல்டி கலர் நோட்டீஸ், விளம்பர பதாகைகள் கையில் எடுத்துச்செல்லும் குச்சி ஆகிய அச்சிடும் பணிக்கு 10.10.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td>முகேஸ்வரன், பிரிண்டர்ஸ் & பப்ளிகேஷன். ஜெயங்கொண்டம்.</td><td>செந்தில் பிரிண்டர்ஸ், ஜெயங்கொண்டம்.</td><td>SB டிஜிட்டல், ஜெயங்கொ ண்டம்.</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>149632.00</td><td>152488.00</td><td>154784.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்த முகேஸ்வரன், பிரிண்டர்ஸ் & பப்ளிகேஷன். ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 238/2022/எச்1</u>
</td>
<td>மன்றம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>18.11.2022</td>
<td>178</td>
<td>
ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2022 – 23 ன் கீழ் பொது சுகாதாரப்பிரிவில் மக்காத கழிவு Sanitary Napkin யை சுகாதரா முறையில் எரியூட்ட Sanitary Napkin Destroyer Machine 1 எண்ணிக்கையில் விநியோகம் செய்யும் பணிக்கு 28.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td>Everest Corporation, Coimbatore.</td><td>Veerakumar Machine Tools, Coimbatore.</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>199000.00</td><td>208770.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u>
</td>
<td>மன்றம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்த **Everest Corporation, Coimbatore** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.<br>**<u>ந.க.எண். 3182/2022/எச்1</u>** | |
| 18.11.2022 | 179 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு 21 வார்டுகளிலும் பன்றிகள் சுற்றிவருதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது மற்றும் சுகாதார சீர்கேடும், பொது சுகாதாரத்திற்கு இடையூறாக சுற்றித்திரிவதாகவும் பொது மக்கள் அடிக்கடி மனுக்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, All India Pig & Dog Catcher, No 8, North Street, Uppukara Medu, Anuppanadi, Madurai – 9 , திரு. P.ராஜமாணிக்கம் என்பவர் பன்றிகளை பிடித்து நகருக்கு அப்பால் காட்டு பகுதியில் அப்புறப்பபடுத்தி தருவாதாக மனு கொடுத்துள்ளார், ஒரு பன்றிக்கு ரூ. 100/– வீதம் 21 வார்டுகளிலும் சுற்றித்திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 4540/2022/எச்1</u>** | மன்றம்<br>**வழங்கலாம்** |
| 18.11.2022 | 180 | இந்நகராட்சிக்கு சொந்தமான 21 வார்டுகளில் பருவ மழைக்காலம் தொடங்கிவிட்டபடியால் கொசுவினால் உண்டாகும் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் கட்டுபடுத்தவும் முதிர் கொசுக்களை புகை மருந்து கொண்டு அழிக்கவும் கட்டுப்படுத்தவும் கையினால் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (HAND FOGGING MACHINE) கைவசம் இல்லாத காரணத்தாலும் 21 வார்டுகளிலும் உள்ள அனைத்து குடியிருப்பு வீடுகளுக்கு முதிர் கொசு ஒழிக்க தேவையான 12 எண்ணிக்கையில் (HAND FOGGING MACHINE) அவசர அவசியம் கருதி வழங்கிட தோராயா செலவினம் ரூ. 4,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 4566/2022/எச்1</u>** | மன்றம்<br>**வழங்கப்படுகிறது** |
| 18.11.2022 | 181 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 61 J 1878 எண்ணிட்ட (Dumper Placer) வாகனம் ஜெயங்கொண்டம் நகராட்சியில் குப்பை தொட்டி இல்லா நகரம் என அறிவிக்கப்பட்ட பின்பு கடந்த 31.01.2020 முதல் வாகனம் இயக்கப்படவில்லை. அதன் பிறகு Covid – 19 கொரோனா தொற்று அதிகளவில் காணப்பட்ட காரணத்தால் கடந்த 07.09.2021 முதல் 24.12.2021 வரை வாகனம் இயக்கபட்டது. தற்சமயம் பொது சுகாதாரப் பிரிவில் இயக்க அவசியமில்லாத காரணத்தால் பொறியியல் பிரிவில் குடிநீர் வாகனம் இல்லாத காரணத்தால் மேற்கண்ட வாகனத்தை குடிநீர் வாகனமாக மாற்றி உபயோகபடுத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.12,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>1. பொது மக்கள் நலன் கருதி குடிநீர் வாகனம் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட வாகனத்தை குடிநீர் வாகனமாக மாற்ற மன்றத்தின் அனுமதிக்கு.<br>2. செலவு தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கலாம்.<br>3. தற்போது தண்ணீர் வண்டி வாடகைக்கு எடுப்பதை தவிர்த்திடும் பொருட்டும் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 4539/2022/எச்1</u>** | மன்றம்<br>**வழங்கப்படுகிறது** |

<table>
<tr><td>18.11.2022</td><td>182</td><td>ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2022 – 23 ன் கீழ் இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள கணினி 5, பிரிண்டர் 2 , மற்றும் ஜெராக்ஸ் மிசின் 1 பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 10.10.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று நிறுவனத்தின் விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th>ரமணி கம்ப்யூட்டர்ஸ், ஜெயங்கொண்டம்.</th><th>எஸ்.பி கம்ப்யூட்டர்ஸ், ஜெயங்கொண்டம் .</th><th>பிஸ்மி கம்ப்யூட்டர்ஸ், ஜெயங்கொண்டம்</th></tr>
<tr><th>விலைப்புள்ளி தொகை ரூ.</th><th>விலைப்புள்ளி தொகை ரூ.</th><th>விலைப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>17100.00</td><td>17850.00</td><td>17950.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்த ரமணி கம்ப்யூட்டர்ஸ், ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 3652/2022/சி1</u></td><td>மன்றம் வழங்கப்படுகிறது</td></tr>
<tr><td>18.11.2022</td><td>183</td><td>இந்நகராட்சிக்கு அவசர அவசியம் கருதி கிருமி நாசினி 3 டன் பிளிச்சிங் பவுடர் தருவிக்க நகர் மன்ற தீர்மான எண். 568 நாள். 25.01.2022 ல் ரூ. 1.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. 3 டன் தருவிக்கப்பட்டதிற்கு ரூ.40.00 வீதம் 3000 கிலோ வாங்கப்பட்டுள்ளதினால் அதற்குண்டான சரக்கு மற்றும் சேவை வரியுடன் சேர்த்து ரூ.1,41,600/– செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டியல் தொகை வழங்கப்படாமல் உள்ளதால் மீதமுள்ள தொகை ரூ.41,600/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. கூடுதல் செலவினம் ரூ. 41,600/– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>ந.க.எண். 5704/2021/எச்1</u></td><td>மன்றம் வழங்கப்படுகிறது</td></tr>
<tr><td>18.11.2022</td><td>184</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.05 ல் உபதேசியார் தெருவில் இயங்கி வரும் சமுதாய கழிப்பிடம் நச்சு தொட்டி நிரம்பி வழிவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளதின் படி, நச்சு தொட்டி சுத்தம் செய்யும் கழிவு நீர் வாகனம் சொந்தமாக நம்மிடத்தில் இல்லை என்பதால், வாடகை கழிவு நீர் வாகனம் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். மேலும் நகராட்சி அலுவலக கழிப்பிட நச்சு தொட்டி நிரம்பி உள்ளதால் மேற்கண்ட இரண்டு இடங்களில் நச்சு தொட்டி சுத்தம் செய்ய வாடகை கழிவுநீர் வாகனம் கொண்டு சுத்தம் செய்ய தோராய செலவினம் ரூ.40,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>ந.க.எண். 4637/2022/எச்1</u></td><td>மன்றம் வழங்கப்படுகிறது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 18.11.2022 | 185 | 2022–2023ஆம் ஆண்டு முதல் 2024–2025ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டிற்கு ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சொந்தமான பிரதி வாரம் திங்கள் கிழமைகளில் நடைபெறும் வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் (குப்பை சேகரம் உள்பட) உரிமத்திற்கு 08.11.2022–ம் தேதி அன்று 5வது அழைப்பாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு நபர்கள் மட்டும் ஏல வைப்புத் தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்தி கீழ்கண்டுள்ள விபரப்படி உச்ச ஏலக் கேள்விக்கு எடுத்துள்ள திரு.சா.தேவேந்திரன் த/பெ சாமிதுரை அவர்களுக்கு பிரதி வாரம் திங்கள் கிழமைகளில் நடைபெறும் வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் (குப்பை சேகரம் உள்பட) உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பார்வைக்கும். | மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது |

| வ. எண் | இனத்தின் விவரம் | ஏலதாரர் / ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | பிரதி வாரம் திங்கள் கிழமைகளில் நடைபெறும் ஜெயங்கொண்டம் வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை (குப்பை சேகரம் உள்பட) | திரு.சா.தேவேந்திரன் த/பெ.சாமிதுரை, ரோட்டு தெரு, கீழகுடியிருப்பு(வி.ரோடு) | 9,85,000 |
| 2. | | திரு.ரா.சுதாகர் த/பெ.ராமையன், வளவெட்டி தெரு, கரடிகுளம். | 9,80,000 |

<u>அலுவலக குறிப்பு.</u>

மேற்படி இனத்திற்கு 20.01.2022, 13.04.2022, 26.08.2022, 13.10.2022 28.10.2022 மற்றும் 08.11.2022 ஆகிய தேதிகளில் 6 முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் வராத நிலையில் பொறுப்பு தொகையினை குறைக்க மன்றமே முடிவு செய்து தீர்மான எண்.169 நாள்.21.10.2022 ம் நாளின் படி மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 6 வது அழைப்பில் வரப்பெற்ற (நாள்.08.11.2022) 2 ஏலதாரர்களில் வரிசை எண் 1ல் கண்டுள்ள திரு.சா.தேவிந்திரன் த/பெ சாமிதுரை என்பவர் உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.9,85,000/–க்கு கேட்டுள்ளார். ஒப்பந்தப் புள்ளி ஏதும் கிடைக்கப்பெறவில்லை.

மேலும் வாரச்சந்தை இதுநாள் வரை அலுவலக பணியாளர்கள் இருவரை கொண்டு வசூல் செய்யப்பட்டு வந்தவண்ணம் 01.04.2022 முதல் 31.10.2022 வரை ரூ.187860/–மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு பணியாளர்களுக்கு மாத ஊதியம் ரூ.54000/– (குறைந்த பட்சம் 27000x2=54000x12=64800) வழங்கப்பட்டு வருகிறது. ஆக வசூல் தொகையினை விட பணியாளர்களுக்கு ஊதியம் கூடுதலாக வருகிறது. மேலும் மேற்படி அலுவலக வசூல் பணியாளர்களை இந்நகராட்சி

உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் (கூ.பொ) திரு.சி.வடிவேல் என்பவரால் ஆய்வு செய்யப்பட்டும் கூடுதலாக வசூல் செய்வதற்கு வழிவகை இல்லை என்றும் சான்று கொடுத்துள்ளார். மேலும் வாரச்சந்தை கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் 10696ச.மீட்டர் பரப்பளவில் நடைபெற்று வந்தது. நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு நிதி ஒதுக்கீடு வரப்பெற்றதால் வாரச்சந்தை நடைப்பெற்ற இடத்தின் ஒரு பகுதியில் 10050 ச.அடி பரப்பளவில் புதிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இதனையும் கருத்தில் கொண்டும் பலமுறை ஏலம் விடப்பட்டதை பார்வையிட்டும் , நகராட்சிக்கு மேலும் வருவாய் ஈட்டும் வகையில் மேற்கண்ட ஏலத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எ.ண்.** 233/2021/அ1

| | | | |
|---|---|---|---|
| 18.11.2022 | 186 | ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய சொத்துவரி , தொழில்வரி , காலிமனை வரி மற்றும் குடிநீர் கட்டணத் தொகையினை இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் செலுத்துவதற்கு ஏதுவாக ஆட்டோ மூலம் 01.11.2022 முதல் 31.03.2023 முடிய விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச லெவினம் ரூ.1,00,000/- க்கும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மற்றும் அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 138 / 2018 / அ1** | மன்றம் **வழங்கலாம்** |
| 18.11.2022 | 187 | அரசாணை ( நிலை ) எண்.92 மற்றும் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022 ன் கண்டுள்ள அரசாணைகளில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்கவும் அதனை செயல்படுத்தவும் விதிகள் வெளியிடப்பட்டுள்ளதை அடுத்து இந் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் ஒவ்வொரு வார்டுகளும் பகுதிகளாக பிரிக்கப்பட்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டங்கள் நடத்துவதற்கு தேவையான நோட்டு புத்தகங்கள் , எழுது பொருட்கள் மற்றும் இதர தேவையான பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச லெவினம் ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 4176 / 2022 / எச்1** | மன்றத்தின் அனுமதி **வழங்கப்படுகிறது** |

| | | | |
|---|---|---|---|
| 18.11.2022 | 188 | ஜெயங்கொண்டம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) 2018-2019 & 2019-2020 மற்றும் மூலதன மானிய நிதி (CGF) 2021-2022 ஆகிய திட்டத்தின் கீழ் ரூ.380.00 இலட்சம் மதிப்பீட்டில் செந்துறை சாலையில் 20 KLD கொள்ளளவு கொண்ட Mechanical Type கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (M-FSTP) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட பணிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அரியலூர் அவர்களால் வழங்கப்படும் நிறுவிட ஒப்புதல் (Consent to Establish) மற்றும் நிறுவிட இயக்குதல் (Consent to Operate) ஆகியவற்றை வழங்க ஏதுவாக அதற்கான உரிய கட்டணம் தொகை ரூ.87,200/- செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகை செலுத்தப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 1207 / 2018 / இ1** | மன்றம் **ஏற்றுக் கொள்ளப்**படுகிறது |

**ஆணையர்,**
ஜெயங்கொண்டம் நகராட்சி.